பக்கங்கள் 23

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 16 திங்கட்கிழமை 01.01.2024 அதிர்வு 154

## எலிக்காய்ச்சலால் இளைஞர் மரணம்

(கி.வசந்தரூபன்)

வவுனியாவில் எலிக்காய்ச்சல் காரணமாக இளைஞர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த இளைஞருக்கு சில தினங்களாகக் காய்ச்சல் 04



# நாட்டை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைவோம்

## புத்தாண்டில் கடமைகளை ஆரம்பித்த ஜனாதிபதி தெரிவிப்பு



2024 ஆம் ஆண்டில் நாட்டை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி, புத்தாண்டில் தனது கடமைகளை ஆரம்பித்து வைத்த தன் பின்னர், இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சர்கள் மற்றும் அவரது ஊழியர்களைச் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 04

# கட்சி தாவல்கள் ஆரம்பம்

## மைத்திரியின் சகா சஜித்துடன் சங்கமம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா, ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை இன்று காலை சந்தித்து கலந்துரையாடிய பின்னர், கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பலாங்கொடை தொகுதி பிரதான அமைப்பாளராகவும் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.





# அதிரடி வேட்டையில் போதை வியாபாரிகளின் பல கோடி பெறுமதியான சொத்துகள் பறிமுதல்

யுக்திய ஒப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டு 14 நாள்களுக்குள் 85 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், பாதாளக் குழு உறுப்பினர்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரிகளிடமிருந்து 55 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சொத்துகளும், வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன .

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கமைய கடந்த 17 ஆம் திகதி யுக்திய ஒப்பரேஷன் ஆரம்பமானது. நேற்று 15 ஆவது நாளாகவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் யுக்திய ஒப்பரேஷன் நடவடிக்கையின்கீழ் 14 நாள்களுக்குள் 20 ஆயிரத்து 797 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆயிரத்து 18 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். 189 பேர் தொடர்பில் சொத்து சம்பந்தமான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருளுக்கு அடிமையான ஆயிரத்து 298 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 17 முதல் டிசம்பர் 14 நாட்களுக்குள்11 கிலோ 600 கிராம் ஹெரோயினும், 8 கிலோ 378 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 297 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன. 20 இலட்சத்துக்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளும் மீட்கப்பட்டுள்ளன.

## 24 மணிநேரத்தில் 1,229 பேர் கைது!

நாட்டில் நேற்று அதிகாலை 12.30 மணி முதல் இன்று அதிகாலை 12.30 வரை மேற்கொள்ளப்பட்ட யுக்திய ஒப்பரேஷன் நடவடிக்கையின்போது 1,229 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 440 கிராம் ஹெராயின், 260 கிராம் ஐஸ் மற்றும் 417 போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கந்தப்பளையில் மண்சரிவு அபாயம்!

## 44 பேர் உடனடியாக வெளியேற்றம்

நுவரெலியா மாவட்டம், கந்தப்பளை கொங்கோடியா மேல் பிரிவு தோட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக 9 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேர் இடம்பெயர்ந்து அத்தோட்டத்தின் பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக இடைவிடாது கடும் மழை பெய்து வருகின்றது.

இந்தநிலையில் கந்தப்பளை பிரதேசத்தில் கடந்த 26 ஆமா திகதி இரவு முதல் பெய்ய ஆரம்பித்த கடும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வருகின்றது.

இப்பிரதேசத்தில் காட்டாறுகள், கால்வாய்களில் நீர் பெருக்கமெடுத்து தாழ் நிலம் பகுதிகளில் வெள்ளம் பாய்ந்து விவசாய நிலங்கள், வீடுகள், பிரதான வீதிகள் எனப் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்தில் காணப்படும் புது வீட்டுப் பகுதிகளில் ஆங்காங்கே பாரிய மண்மேடு சரிவுகள் ஏற்பட்டு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.



அந்தவகையில் கொங்கோடியா தோட்டம் மேல் பிரிவில் கடந்த 2002 ஆம் ஆண்டு தோட்ட நிர்வாகத்தால் வீட்டற்றவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகளில் பயனாளிகள் கடன் அடிப்படையில் அமைத்துக் கொண்ட தனி வீட்டுப் பகுதிகளில் இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

மண் சரிவு ஏற்பட்டுள்ள குறித்த குடியிருப்புப் பகுதி மண்சரிவு அபாய பகுதியாக அடையாளம் காணப்பட்டு அப்பகுதியில் வசித்த 9 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேர் அந்தத் தோட்டத்தின் பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்தில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில் இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பத்தினரை நேரில் சென்று சந்தித்துப் பேசிய நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர் டபிள்யூ.எம். பிரதிப் தனஞ்சூரிய, அவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை உடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.




# லிட்ரோ எரிவாயுவின் விலை உயர்வு

நாட்டில் இன்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், லிட்ரோ சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 685 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

12.5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை 4 ஆயிரத்து 250 ரூபாவாகும்.

அத்துடன், 5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 276 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,707 ரூபாவாகும்.

மேலும், 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 127 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை 795 ரூபாவாக்கும்.



# எரிபொருள்களின் விலை அதிரடியாக அதிகரிப்பு!

## மண்ணெண்ணெய்யின் விலை மாத்திரம் 11 ரூபாவால் குறைப்பு

நாட்டில் இன்று அதிகாலை 5 மணி முதல் அமுலாகும் வகையில், இலங்கை கனிய வள கூட்டுத்தாபனத்தின் எரிபொருளின் சில்லறை விற்பனை விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை, 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அதன் புதிய விலை 366 ரூபாவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை, 38 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 464 ரூபாவாகும்.

இதேவேளை, ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை, 29 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 358 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 41 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 475 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை, 11 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 236 ரூபாவாகும் என்று இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# பாரவூர்தி விபத்தில் இருவர் உயிரிழப்பு

## மேலும் இருவர் படுகாயம்

கட்டுவன – ஊருபொக்க வீதியில் பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இரண்டு பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், இந்த விபத்தில் மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தி ஊருபொக்க – ருக்மல்பிட்டிய பகுதியில் வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதிய நிலையிலே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்தநிலையில், விபத்தில் படுகாயமடைந்த நான்கு பேரும் கட்டுவன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி பாரவூர்தியின் சாரதி உயிரிழந்தார்.

அத்துடன், ஏனைய மூன்று பேரும் மேலதிக சிகிச்சைகளுக்காக வரஸ்முல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது மற்றுமொருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஏனைய இரண்டு பேரும் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கராப்பிடிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



# நாகர்கோவில் பகுதியில் கரை ஒதுங்கிய மிதவை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.01

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கிழக்கு எல்லைக்குட்பட்ட கடல் பிரதேசத்தில் துறைமுகங்களில் கப்பலிற்கு பொருள்கள் ஏற்றப் பயன்படுத்தப்படுவதாகக் கருதப்படும் மிதவை ஒன்று கரைக்கு அடித்து வரப்பட்டுள்ளது.

வத்தை வடிவிலான இந்த மிதவை முழுமையாக இரும்பிலானது. 18 அடி நீளம் 10 அடி அகலம் கொண்ட இந்த மிதவை இன்று காலை கரையொதுங்கியுள்ளது.



இந்த மிதவையை மீனவர்கள் கடும் முயற்சி எடுத்துக் கரைக்கு இழுத்து வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையான மிதவை இந்தியாவின் பாண்டிச்சேரி, தூத்துக்குடி மற்றும் நாகைப்பட்டின துறைமுகங்களில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கரையொதுங்கிய இந்தக் கலம் தொடர்பில் பொலிஸார் மற்றும் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு சில நாள்களுக்கு முன்பு வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி கடற்கரையிலும் மிதவை ஒன்று கரையொதுங்கி பரபரப்பை ஏற்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எலிக்காய்ச்சலால்...

இருந்துள்ளது. இதையடுத்து செட்டிகுளம் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அங்கிருந்து வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இதன்பின் சட்ட வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் மேற்படி இளைஞர் எலிக்காய்ச்சல் காரணமாக மரணமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

செட்டிகுளம், முகத்தான்குளத்தை சேர்ந்த பிரசங்கர் என்ற 22 வயது இளைஞரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

### நாட்டை வெற்றிப்பாதைக்கு...

ஜனாதிபதி புதிய வருட கடமைகளை ஆரம்பிக்கும் முகமாக, தேசியக் கொடியை ஏற்றிவைத்த பின்னர், நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி அலுவலக ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரச சேவை உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

தனது ஊழியர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி, அவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

சவால்களை சரியாகப் புரிந்து கொண்டு 2024 ஆம் ஆண்டில் நாட்டை வெற்றிப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கு நம்பிக்கையான மனப்பான்மையுடனும் உறுதியுடனும் அனைவரும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்கள் மற்றும் ஊழியர்களுடன் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஷெஹான் சேமசிங்க, கனக ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரமானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார விவகாரங்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகார ஆலோசகர் ஆஷு மாரசிங்க, ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஈ.பி.டி.பியின் ஆதரவு ரணிலுக்கு!

## தமிழ் வேட்பாளர்கள் என்பது பயனற்ற கதை என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(கி.வசந்தரூபன்)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கும். தமிழ் வேட்பாளர் என்பது பயனற்ற கதை என்று கடல்தொழில் அமைச்சரும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமாகிய டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் இறுதியில் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஈ.பி.டி.பியைப் பொறுத்த வரையில் இன்று இருக்கக் கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.

ஏனெனில் எமது நாடு பொருளாதாரத்தில் ஆதல பாதாலத்துக்குச் சென்ற போது, அதே நேரம் வன்முறைகளும் தலைவிரித்தாடிய போது எவரும் முன் வந்து நாட்டை பொறுப்பெடுக்கவில்லை. தயங்கினர். இந்த நிலையில் ரணில் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் முன் வந்தவர்.

அவர் பிரேக் டவுன் ஆகிய பேருந்து ஒன்றையே எடுத்திருந்தார். இன்று டிங்கரிங் செய்து ஓட வேண்டிய நிலைமையில் அது வந்துள்ளது. மற்றபடி அனைத்துப் பிரச்சினைகளும் சரி செய்யப்பட்டுவிட்டன. எனவே அவரோடு பயணிக்க வேண்டும் என்றே மக்கள் விரும்புகின்றனர்.

தமிழ் வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறும் வாய்ப்பு என்பது இந்த நாட்டில் இல்லை. ஆகவே தென் இலங்கையில் வென்று வரக்கூடிய ஒரு வேட்பாளரை நாட்டை வழிநடத்தக் கூடிய வகையில் நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஒருவருடனேயே நாம் பயணிக்க வேண்டும். அவருடனேயே நாம் பேசவும் வேண்டும்.

தமிழ் வேட்பாளர் என்பதெல்லாம் ஒரு பூச்சாண்டிக் கதையும் பயனற்ற விடயமும்தான். அதை நாம் ஒரு கருத்தாகவே எடுத்துக் கொள்ளவில்லை. - என்றார்.

# சிகரெட்டின் விலையும் அதிகரிப்பு



நாட்டில் இன்று (01) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சிகரெட்டின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 5, 15, 20 மற்றும் 25 ரூபா ஆகிய விலைகளில் 4 பிரிவுகளின் கீழ் சிகரெட் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.இன்று முதல் நாட்டில் பெறுமதி சேர் வரி 18 வீதமாக அதிகரிக்கப்பட்டமை நடைமுறைக்கு வருவதனாலேயே சிக ரெட்டின் விலையிலும் மாற்றம் ஏற் பட்டுள்ளது.

இதேவேளை இன்று (01) முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபானங்களின் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்று டிஸ்டில்லரீஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 90 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கருகும் மொட்டு

புத்தாண்டு பிறந்து விட்டது. 2023 இப்போது கடந்து - கழிந்து - விட்ட விவகாரம்.

பிறந்தது தேர்தல் ஆண்டு என்பது அது பிறக்கும் முன்னரே அறிவிக்கப்பட்ட விடயம். இன்னும் பத்து மாதங்களுக்குள் எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அது பெரும்பாலும் நிச்சயமான ஒன்று.

தேர்தல் ஆண்டு என்பதால் அதில் அரசியல் குத்துக்கரணங்கள், நாடகங்கள், இழுபறிகள் எல்லாம் தவிர்க்க முடியாதவையாக இருக்கும்.

அதன்படி, தேர்தல் வருடம் பிறந்த கையோடு, தேர்தலுக்கான அரசியல் குத்துக்கரணம் பற்றிய முதல் தகவலும் உடனே வெளியாகியுள்ளது. இனி அடுத்தடுத்து அது போன்ற பல செய்திகள் வெளியாகும் என்பது நிச்சயம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஷான் விஜயலால் டி சில்வா எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார். அவர் தென் மாகாண முதலமைச்சராகவும் முன்னர் இருந்தவர். அவரைத் தமது ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பலாங்கொடைத் தேர்தல் தொகுதி அமைப்பாளராகவும் சஜித் பிரேமதாஸ நியமனம் செய்திருக்கின்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன (மொட்டு) கட்சியின் அணியிலிருந்து இத்தகைய பல அணிமாறல்களை இனி அடிக்கடி நாம் காணலாம் என உறுதி கூற முடியும். அவ்வளவுக்கு குழப்பத்தின் உச்சியில் நிற்கின்றது அந்த கட்சியும் அதன் கூட்டணியும்.

இப்போது நடக்கும் அரசு மொட்டு கட்சிக் கூட்டணியினுடையது என்று கூறப்பட்டாலும், அரசின் மீது அக்கட்சிக்கோ அதன் தலைமைக்கோ அல்லது கூட்டணிக்கோ ஏதேனும் செல்வாக்கு - கட்டுப்பாடு - இருப்பதாகத் தெரியவில்லை. இப்போதைய அரசியல் நிலைவரத்தை எப்படிக் கையாள்வது, எந்த செல்நெறியில் செல்வது, எதிர்காலத் திட்டம் யாது என்பவை குறித்தெல்லாம் தெளிவான பார்வையோ, உருப்படியான செயற்திட்டமோ அக்கட்சியிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதன் கூட்டணியின் கட்சிகளிடமும் இருப்பதாக இல்லை.

இவ்வாண்டில் ஜனாதிபதி தேர்தல் என்பது பெரும்பாலும் உறுதியான விடயம். அதற்கு இன்னும் பத்து மாதங்கள்தான் இருக்கின்றன. ஆனால் அந்தத் தேர்தல் தொடர்பில் மொட்டுக் கட்சியின் அணுகுமுறை யாது என்பது சம்பந்தமாக கட்சிக்கோ தலைமைக்கோ இன்னமும் திட்டவட்டமான நிலைப்பாடு அல்லது கருத்தியல் இருப்பதாகத் தெளிவில்லை. எல்லாப் பக்கமும் வழியைத் திறந்து வைத்துவிட்டு, அது செயலின்றி கிடப்பதாகவே மக்கள் பார்க்கின்றார்கள்.

கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னரே அது குறித்துத் திட்டம் தீட்டி செயற்பட ஆரம்பித்திருந்தார். அவர் தேர்தலில் வென்று என்ன சாதித்தார் என்பது வேறு விடயம். ஆனால் அப்போது தேர்தல் வெற்றிக்கான உருப்படியான செயல் திட்டமும் இலக்கும் கருத்து நிலைப்பாடும் மொட்டுக் கட்சியில் இருந்தன. அதனால்தான் அத்தேர்தலில் அக் கட்சியினால் 69 லட்சம் வாக்குகளைச் சூறையாட முடிந்தது.

ஆனால் அக்கட்சியின் நிலைமை இப்போது அப்படியல்ல. இன்னும் பத்து மாதங்களில் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இன்னமும் ஒரு முடிவை அக்கட்சி எடுக்காத நிலையில் குழப்பகரமான நிலையில் இருக்கும் அக்கட்சிக் கட்டமைப்பிலிருந்தும், அதன் கூட்டமைப்பிலிருந்தும் எம்.பிக்கள், முக்கிய பிரமுகர்கள் வெளியேறிக் கொண்டிருக்கும் நிலை தொடரும். அது இயல்பான - தவிர்க்க முடியாத - நிலைமைதான்.

கட்சி தன் நிலைப்பாட்டை வெளிப்படையாக - தெளிவாக - உறுதியாக - வெளிப்படுத்தி, தான் இயங்கப் போகும் கூட்டமைப்பு மற்றும் அதன் தலைமைத்துவம் ஆகியன குறித்தெல்லாம் உடனடியாக தீர்மானித்து அறிவிக்காவிட்டால், கட்சி இப்படிக் கடைசியில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக கரைந்து விடுவது மாற்ற முடியாததாகத்தான் இருக்கும்.

# மஹியங்கனை – கண்டி வீதியில் ஏற்பட்டுள்ள பாரிய மண் சரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மஹியங்கனை – கண்டி பிரதான வீதியின் ஹுன்னஸ்கிரிய பகுதியில் நேற்று அதிகாலை பாரிய மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் பிரதான வீதி முற்றாக தடைப்பட்டது. அந்தப் பகுதியில் மின் சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.




HAPPY
New
YEAR
2024
Ruhbins
Hospital
RUHBINS HOSPITAL (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94773123456



# வீட்டை தீயிட்டு கொளுத்திய நபர் பொலிஸாரால் கைது!

(கி.வசந்தரூபன்)

வவுனியா, நெடுங்கேணி, 17ஆம் கட்டை பகுதியில் வீட்டையும் வீட்டில் இருந்தத பொருள்களையும் தீயிட்டுக் கொளுத்திய நபர் ஒருவரை ஒட்டு சுட்டான் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

அந்த நபர் அதேபகுதியை சேர்ந்த பெண் ஒருவரை திருமணம் செய்த நிலையில் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்ப்பட்டமையால் அந்த பெண் பிரிந்து தனியாக வசித்து வருகின்றார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபர் கடந்த சில நாள்களாக அவரது மனைவியான அந்த பெண்ணையும், அவரது குடும்பத்தினரையும் அச்சுறுத்தி வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக முறைப்பாடு வழங்குவதற்காக அவசர பொலி ஸாருக்குப் பலமுறை அழைப்பை ஏற் படுத்தி அறிவித்திருந்தோம். இருப் பினும் அவர்கள் வருகை தரவில்லை என பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித் தனர்.

சம்பவம் தொடர்பாக நேற்று (31) ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாட்டைப் பதிவு செய் திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த நபர் நேற்று மாலை தனது மனைவியின் சகோத ரியின் வீட்டுக்கு சென்று வீட்டைத் தீயிட்டு எரித்துள்ளார். அங்கிருந்த பொருள்கள் அனைத்தையும் அடித்து நொருக்கியுள் ளார். வீட்டில் உள்ள பொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்துள்ளது.

இதனையடுத்து ஒட்டுசுட்டான் பொலிஸாரால் அந்த நபர் கைது செய் யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# இலங்கைக்கு சீன ஆராய்ச்சிக் கப்பல்; ஒரு வருடத்துக்கு அனுமதிகள் மறுப்பு!

## இந்தியப் பிரதமரின் வலியுறுத்தலை அடுத்து நடவடிக்கை

எந்தவொரு சீன ஆராய்ச்சிக் கப்பலையும், இலங்கைத் துறைமுகங்களில் நங்கூரமிடவோ அல்லது அதன் பிரத்தியேக பொருளாதார மண்டலத்துக்குள் செயற்படவோ ஒரு வருடத்துக்கு அனுமதிக்கப் போவதில்லை என்று இந்தியாவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் மூலோபாய மற்றும் பாதுகாப்புக் கவலைகளுக்கு மதிப்பளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சீன ஆராய்ச்சிக் கப்பலான Xiang Yang hong 3 தென் இந்தியப் பெருங்கடலில் ஆழமான நீர் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படமாட்டாது என்று இலங்கை தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள இந்த தடை, கடந்த வாரம் உயர்மட்ட இராஜதந்திர தரப்புக்கள் மூலம் இந்தியாவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2024 ஜனவரி 5 முதல் 2024 மே இறுதி வரை தென் இந்தியப் பெருங்கடலில் "ஆழ்ந்த நீர் ஆய்வு" நடத்த திட்டமிடப்பட்ட சீன அறிவியல் ஆய்வுக் கப்பலான Xiang Yang hong 3க்கு இலங்கை அதிகாரிகளால் அனுமதி வழங்கப்படாது.

இதேவேளை, இந்தக் கப்பலை ஆய்வுக்கு அனுமதிக்குமாறு மாலைதீவிடமும் சீனா கோரிக்கையை முன்வைத்திருந்தது. எனினும் இது தொடர்பில் மாலைத்தீவின் பதில் இது வரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சிக்கான குடி தண்ணீரை இரணைமடுவில் இருந்து வழங்குக!

## பல்வேறு தரப்பிலும் கோரிக்கை முன்வைப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்துக்கான குடி தண்ணீர் விநியோகத்துக்கு உரிய நீரை இரணைமடுக்குளத்தில் இருந்து நேரடியாக பெற்று சுத்திகரித்து வழங்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்துக்குக் குடி தண்ணீர் பெற்றுக் கொள்ளும் கிளிநொச்சிக் குளமானது அதிகளவில் மாசடைந்து மனித பாவனைக்கு உதவாத நீராக காணப்படுகின்றது என்று தொடர்சியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதும் குறிப்பிட்ட குளம் நீர் விநியோகத்துக்குப் பொருத்த மற்றது என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளும் பகுதிகளுக்குப் போதியகுடிதண்ணீரைவழங்குவதற்கும் சுத்தமான பாதுகாப்பான நீரை வழங்குவதற்கும் ஏற்ற வகையில் இரணைமடுக்குளத்தில் இருந்து நேரடியாக நீரைப் பெற்று சுத்திகரித்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சி குளத்தில் இருந்து பெறப்படும் நீரானது சுத்திகரிக்கப்பட்டாலும் அது குடிப்பதற்கு உகந்தது இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சிக் குளத்தைச் சூழ உள்ள பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. பாவனைக்கு உதவாத கழிவு பொருள்களும் விலங்கு கழிவுகள் அதிகளவில் இங்குகொட்டப்படுகின்றன.

கடந்த பத்து வருடங்களுக்குள் சுமார் 126 இற்கும் மேற்பட்டோர் இந்தக் குளத்தைச் சூழவுள்ள நீரேந்து பகுதிகளை ஆக்கிரமித்துள்ளனர். அந்தப் பகுதிகளில் பாதுகாற்ற மலசல கூடங்களை அமைத்துள்ளனர். மலக்கழிவு நீரும் நிலத்தடி நீருடன் சேர்ந்து குளத்து நீருடன் கலக்கின்ற நிலைமை காணப்படுகிறது.

எனவே இரணை மடுக்குளத்தில் இருந்து நேரடியாக நீரைப் பெற்று சுத்திகரித்துக் குடி தண்ணீரை வழங்குவதற்கு உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# இலவச தொழிற்பயிற்சி வகுப்புக்கள் வட்டுக்கோட்டையில் ஆரம்பமாகின

(த.சுபேசன்)

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் 14 ஆவது வருடமாக யுவதிகளின் சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக இலவச தொழிற்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தையல் பயிற்சி, கேக் ஐசிங், ஆரி வேக், அழகுக்கலை ஆகிய பயிற்சி வகுப்புகள் ஆறுமாத காலத்துக்கு இலவசமாக முன்னெடுக்கபடவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சண்முகநாதன் ஜெயந்தன், மகளிர் அணிச் செயற்பாட்டாளர்களான அம்பிகை மற்றும் பரமானந்தவள்ளி, உதய வாழ்வு தையல் பயிற்சி ஆசிரியை அமராவதி இராசரத்தினம், மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



# வாசிப்பு போட்டியில் தேசிய ரீதியில் சாதனை!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 07 இல் கல்வி கற்கும் மாணவன் இப்திகார் மொஹமட் இனான் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற தமிழ்மொழி தின வாசிப்புப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் சான்றிதழையும் பெற்று பாடசாலைக்கும், கற்பிட்டி கோட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் தேசிய ரீதியிலான கணித ஒலிம்பியாட் போட்டிக்கும் தகுதி பெற்றுள்ளார்.

சிங்கள தின பேச்சுப் போட்டியில் புத்தளம் வலய மட்டத்தில் முதலாம் இடம்பெற்று மாகாண மட்டத்துக்கும் சமூக விஞ்ஞான போட்டியில் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்று மாகாண மட்டத்துக்கும் தெரிவாகியிருந்தார்.

அத்தோடு கலாசார அலுவல்கள் திணைக்களமும் புத்தளம் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்திய 2023 தேசிய இலக்கிய விழாவில் பாடல் நயம் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



# வாழ்வாதார உதவி வழங்கல்

வடக்கு, கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் மாற்றம் அறக்கட்டளையின் அனுசரணையில் முன்னாள் போராளிகள் குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரம் வழங்கப்பட்டது .

இந்த நிகழ்வில் வடக்கு, கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தின் பணிப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமாகிய சுகிர்தன் அதன் அனுசரணையாளர்களுடன் கலந்து கொண்டார்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மகளிர் கிளை புனரமைப்புக் கூட்டம்





**(கே. எ. ஹமீட்)**

மாவடிப்பள்ளி மேற்கு கிராம சேவகர் பிரிவு, கிழக்கு கிராம சேவகர் பிரிவுகளுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மகளிர் கிளை புனரமைப்பு கூட்டம் மாவடிப்பள்ளி பிரதேச அமைப்பாளர் எம்.ஐ.எம்.றியால் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொருளாளருமான பைசல் காசீம், பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச்சருமான, எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளர் ஏ.சி.சமால்டீன், மாவடிப்பள்ளி பிரதேச கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



# திருகோணமலையில் நடந்த தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு!

(ஹஸ்பர்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வு நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ.இராஜசேகர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குக் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளர் என்.மணிவண்ணன் கலந்து கொண்டார்.

பல்வேறு கலை நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், 'அருவி' சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப் பட்டது.

போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் மற்றும் சாதனையாளர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.








# அனர்த்தங்களை குறைப்பதற்கான முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வட கிழக்கு பருவ மழை காலத்தில் ஏற்படக் கூடிய திடீர் அனர்தங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் அனர்த் தங்களை குறைப்பதற்கான அம்பாறை மாவட்ட முன்னேற்பாடு சம்பந்தமாக ஆராயப்பட்டது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம ஏற்பாட்டில் அம் பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றிபாஸ் தலைமையில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் அனர்த்த முன் னேற்பாடு சம்பந்தமான கலந்துரை யாடல் இடம்பெற்றது. திடீர் அனர்த்த நிலமைகளின் போது நிலமை களை குறைப்பதற்கு சட்ட ரீதியாக மேற் கொள்ள வேண்டிய நடவடிக் கைகள் குறித்து விரிவாக ஆராயப் பட்டது.



இந்த நிகழ்வில் அம்பாறை மாவட் டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், முப்படை அதி காரிகள், அனர்த்த முகாமைத்துவக் குழுவினர் கலந்து கொண்டனர்.






# பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு கிண்ணியாவில் உபகரணம் வழங்கல்

(ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விவசாய உற்பத்தி மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முஸ்லிம் எய்ட் அமைப்பால் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் விவசாய வாழ்வாதர திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளூரில் உற்பத்தியாகும் விவசாய உற்பத்தியை மூலப்பொருளாக கொண்டு “விவசாய பெறுமதி சேர்த்தல் உற்பத்தி” தொழில் முயட்சியாளர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிண்ணியா பிரதேச செயலகத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம் கனி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சூரங்கள், மஹருகிராம, கச்சக்கொடித்தீவு, பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட பெண்




தொழில் முயற்சியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி பிரதம அதிதியாக கலந்து கொண்டு வழங்கினார்.

இவ்வருடம் சுமார் 18 மில்லியன் பெறுமதியான வாழ்வாதர திட்ட உள்ளீடுகள் கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் முஸ்லிம் எயிட் ஊடாக வழங்கப்பட்டுள்ளன்

நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம் கனி, உதவி பிரதேச செயலாளர் திருமதி பாஹிமா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் நிசவ்ஸ் முஸ்லிம், எய்ட் அதிகாரி எஸ்.எம்.ரிபாய் ,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# கல்முனை சாரதிகள் நலன்புரி சங்க வருடாந்த பொதுக் கூட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் இணைந்த சாரதிகள் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் சேவைநலன் பாராட்டு நிகழ்வும் நிந்தவூரில் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக் டர் திருமதி ஷகீலா இஸ்ஸதீன் அர்ப் பணிப்புமிக்க சுகாதார சேவைகளை வழங்கி வரும் சாரதிகளுக்கு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.



# ஏறாவூர் பெண்கள பாடசாலையின் பரிசளிப்பு!

(கே. எ. ஹமீட்)

ஏறாவூர் அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.வை.எம் நஸிர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்க ளப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செய்யது அலி சாகிர்மௌலானா கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன் கலந்து கொண்டார்.

பாடசாலையில் கற்றல் நடவடிக்கை யில் மேற்கொண்டு புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவிகள், க.பொ.த சாதாரணதரத்தில் 9ஏ, 8ஏ சித்தி பெற்ற மாணவிகளும், க.பொ.த உயர்தரத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிகளுக்கு பரிசில்கள் மற்றும் நினைவுச்சின்னம் வழங்கி கௌர விக்கப்பட்டனர்.

2023 ஆம் வருடம் தேசிய ரீதியில் இடம் பெற்ற 20 வயதுக்குட்பட்ட எறி பந்து போட்டியில் இப்பாடசாலை மாண விகள் வெற்றி பெற்றதுடன் 13 வயதுக்கு உட்பட்ட எறிபந்து போட்டில் இரண்டாம் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட ஆசிரியர்க ளுக்கும் இதன் போது அதிதிகளால் கௌரவம் வழங்கப்பட்டது.பாடசாலை மாணவிகளால் கண்கவர் நடனம் அரங்கேற்றப்பட்டது.

ஏறாவூர் பிரதேச செயலாளர் திருமதி நிஹாரா மௌயூத், மட்டக் களப்பு மத்தி வலயக் பிரதி கல்விப் பணிப்பாளர் ரிஃப்ஹா மற்றும் எம். எச்.எம். ரமிஸ் மற்றும் பிரமுகர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.












# கல்லடி விவேகானந்தாவில் பரிசளிப்பு விழா!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, கல்லடி, உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன் தினம் சனிக்கிழமை (30) கல்லூரி நடராஜானந்தா மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் திருமதி நவகீத்தா தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்லடி, உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாத வானந்தாஜீ ஆன்மீக அதிதியாகவும், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும், மாவட்டச் செயலாளருமான திருமதி ஜே.ஜே.முரளீதரன் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சாமினி ரவிராஜ் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும், மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ஜே.பிரபாகரன், பாடசாலை பழைய மாணவர் சங்கச் செயலாளர் செயலாளர் வைத்தியர் திருமதி பி.சசிகுமாரன், மட்டக்களப்பு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.லவகுமார் மற்றும் பாடசாலை அபிவித்திக் குழுச் செயலாளர் பி.வேந்திரராஜா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவிகள், க.பொ.த. சாதாரண தரத்தில் 9ஏ, 8ஏ சித்தி பெற்றவர்கள், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று, பல்கலைக் கழக அனுமதி பெற்ற மாணவிகள் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்தோடு ஆசிரியர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்தப் பரிசளிப்பு விழாவில், வரவேற்பு நடனம், ஆங்கிலப் பாடல், ஜோடி நடனம், நாடகம், மும்மொழிப் பாடல் போன்றன அரங்கேறின.
















# சாவகச்சேரி கோட்டக் கல்வி பணிப்பாளரின் மணிவிழா!

(த.சுபேசன்)

சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசாவின் மணிவிழா நிகழ்வுகள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் பேரின்பநாதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றிருந்தன.

நிகழ்வில் வாழ்த்துரைகளை ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை, மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி வ.கபிரியேபிள்ளை மற்றும் வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வை.விஜயகுமார் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர்கள் , தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டு நினைவுச் சின்னம் மற்றும் நினைவு மடல்களை வழங்கிக் கௌரவித்திருந்தனர்.





# நுணாவில் சிறுவர் பூங்காவுக்கு விளையாட்டு உபகரணங்கள்

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் சிறுவர் பூங்காவுக்கு முன்னாள் நகரசபை உறுப்பினர் அமரர் யோ.ஜெயக்குமாரின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் சாவகச்சேரியின் முன்னாள் உறுப்பினரும், தென்மராட்சி அபிவிருத் திக் கழகத்தின் முன்னாள் தலைவருமான அமரர் யோ.ஜெயக்குமாரின் குடும்ப உறுப்பினர்கள், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் நடனதேவன், தென்மராட்சி அபிவிருத் திக்கழக பிரதிநிதிகள், சாவகச்சேரி நகரசபையின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.





# பதியத்தலாவவில் சாஹித்திய விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

2023 ஆம் ஆண்டுக்கான படைப்பாளிகளின் அறுவடை நிகழ்வான சாஹித்திய விழா அண்மையில் அம்பாறை பதியத்தலாவ பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பதியத்தலாவ உதவி பிரதேச செயலாளர் அப்துல் பாஸித் தலைமையில் இலக்கிய போட்டிகளுக்கான படைப்பாளிகளின் சாதனைகளை பாராட்டும் வகையில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

இதில் நிர்வாக கிராம சேவை உத்தியோஸ்தர், அலுவலக அனைத்து பிரிவுகளதும் தலைவர்கள், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் படைப்பாளிகள் கலந்து கொண்டனர்.



# மாளிகைக்காடு வை.எம்.எம்.ஏ. பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

மாளிகைக்காடு வை.எம்.எம்.ஏ. கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம் மாளிகைக்காடு வை.எம்.எம்.ஏ. அலுவலகத்தில் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ் பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. தலைவர் பிரதி அதிபர் எம்.ஐ.ஹாசீம், அட்டாளைச்சேனை பொருளாளர் ஏ.எம்.சுலைமாலெப்பை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாளிகைக்காடு வை.எம்.எம்.ஏ. கிளையின் 2024 - 2025 ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது. புதிய தலைவராக ஆசிரியர் எம்.எச்.எம்.ஜாபீர் , செயலாளராக பல்கலைக் கழக மாணவன் ஜே.எம்.ஜ்ஹைப் உட்பட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.



# 176 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்தியவருக்கு மறியல்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சட்டவிரோதமான முறையில் தங்கத்தை கடத்த முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஶ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவன ஊழியரான அந்த நபர் எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



176 மில்லியன் ரூபா பெறுமதியான 66 தங்க பிஸ்கட்டுகளை உள்ளாடையில் மறைத்து வைத்துக் கொண்டு விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்ட போதே சுங்க அதிகாரிகளால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். தங்க பிஸ்கட்டுகளை சுங்கப் பிரிவினர் பறிமுதல் செய்ததுடன், சந்தேகத்துக்கு இடமான கேட்டரிங் நிறுவன ஊழியருக்கு 176 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அபராதம் செலுத்த தவறியதால், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சுங்க ஊடகப் பேச்சாளர் சிவலி அருக்கொட தெரிவித்தார்.



# சாய்ந்தமருது ஆஸ்பத்திரியில் சமூக அமைப்பினர் சிரமதானம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது வைத்தியசாலையின் சுற்றுச் சூழலை அழகுபடுத்தும் முகமாக சிரமதானப் பணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் மரம் நடுதல் நிகழ்வையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை (30)ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த சிரமதானப் பணியில் ஓ.ஜீ. சமூக அமைப்பினர், ஓ.ஜீ. விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், ஸஹிரியன் 90 பழைய மாணவர் அமைப்பினர் ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.








# கற்பிட்டியில் புலமைப்பரிசில் பரிசளிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையில் இந்த முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விஷேட நிகழ்வு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களின் ஏற்பாட்டில் பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அஸ்ரப் அலி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமனாயக்க, மேர்சி லங்கா நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் அஷ்ஷேஹ் ஹஸன் சியாத் மற்றும் வன்னி முந்தல் டிரீம் ஹவுஸ் அனாதை இல்லத்தின் உதவி பணிப்பாளர் என்.டி ஹாஜித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் விஷேட அதிதிகளாக ஆனவாசல் கிராம உத்தியோகத்தர் டிலானி பீரிஸ், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் டில்சாத், கற்பிட்டி பிரதேச சபையின் முன்னால் எதிர் கட்சி தலைவர் ஜே.எம் தாரிக், கற்பிட்டியின் சமூக சேவையாளர்களும் தொழில் அதிபர்களுமான ஏ.ஆர்.எம் முஸம்மில், எம்.ஐ.அப்துல் லதீப், முகத்துவாரம் பாடசாலையின் முன்னால் அதிபர் ஆஸ்தீன், அல்ஹிரா ஆரம்ப பாடசாலை முன்னால் அதிபர் எஸ்.எம் ஐயூப்கான் கற்பிட்டி பசார் ஜும்ஆ பள்ளியின் முன்னாள் தலைவரும் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினருமான அலி சப்ரி ஹாஜி, பாடசாலை அபிவிருத்தி சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான எஸ்.எம். ரியாஸ், ஏ.சீ ஹலீம் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான எம்.ஆர் றிபாத் சிமா (160), எம்.ஏ செய்னப் நுபா (156), எப் பாத்திமா பஹ்மா (148) ஆகிய மூவரும் பிரதம அதிதிகளால் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டும் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# மன்னார் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு ஆடுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படும் ஆடு வளர்ப்பு திட்டத்தின் மூலம் மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்களை உள்ளடக்கியவாறு சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் வழங்கப்பட்டன.

ஒரு பயனாளிக்கு மூன்று ஆடுகள் வீதம் மொத்தமாக மன்னர் மாவட்டத்தில் 120 பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கப்பட்டன.

மன்னார் நகர பிரதேச பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 32 பயனாளிகளில் முதற்கட்டமாக 7 பயனாளிகளுக்கு ஆடுகள் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானால் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர் , கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.



# ராமர் கோயிலை அரசியலுக்காக பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

புல்வாமா தாக்குதலை அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்திய பா.ஜ.க, அயோத்தி ராமர் கோயில் திறப்பிலும் அதே யுக்தியை கையாளுகிறது என்று கர்நாடக அமைச்சர் தசரதைய்யா சுதாகர் குற்றம் சாட்டியுள்ளார்.

கர்நாடக காங்கிரஸ் அரசின் திட்டமிடல் மற்றும் புள்ளியியல்துறை அமைச்சர் தசரதைய்யா சுதாகர், சித்ரதுர்காவில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில்,

"கடந்த 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது புல்வாமா தீவிரவாத தாக்குதலை வாக்குக்காக பா.ஜ.க. அரசு பயன்படுத்தியது. இந்த முறை அந்த இடத்தில் ராமரின் படத்தை வைத்திருக்கிறது. மக்கள் முட்டாள்கள் இல்லை. நாம் இரண்டு முறை முட்டாள் களாகி விட்டோம். மூன்றாவது முறையும் முட்டாள்களாக மாட்டோம் என்று நான் நம்புகிறேன்.

ராமர் கோயில் திறப்பிக்கு பின்னால் மக்களவைத் தேர்தல் உள்ளது என்பது உண்மைதான். நானும் ரகுமூர்த்தி



எம்.எல்.ஏவும் ராமர் கோயிலுக்கு பணம் கொடுத்துள்ளோம். கடந்த காலத்தில் கோயில்களுக்கு செங்கல் அனுப்பியிருக்கிறோம். இந்தியாவின் மதநம்பிக்கையை பா.ஜ.க. வாக்குகள் பெற பயன்படுத்து கிறது. கடந்த தேர்தலில் இந்த ராமர் கோயில் எங்கே இருந்தது?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

# நடிகர் விஜயகாந்துக்கு மதுரையில் சிலை வைக்க காங்கிரஸ் கோரிக்கை

தே.மு.தி.க. தலைவரும், நடிகருமான விஜயகாந்த்துக்கு மதுரையில் சிலை வைக்க, காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் மற்றும் அந்த கட்சியின் மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் மாநகராட்சிக்கு கோரிக்கை மனு அளித்துள்ளனர். அந்த மனுவை அரசு கவனத்துக்கு கொண்டு சென்று பரிசீலிப்பதாக மேயர் இந்திராணி தெரிவித்துள்ளார்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் அருகே நடிகர் விஜயகாந்த் வீடு உள்ளது. அந்த வீட்டில் தற்போது விஜய காந்த் தம்பி குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

அவரது குடும்பத்துக்கு சொந்தமாக கீரைத்துரையில் உள்ள அரிசி ஆலை தற்போதும் செயல்பட்டுக் கொண்டி ருக்கிறது. அந்த ஆலையை அவரது குடும்தினர் மற்றொருவரிடம் வாடகைக்கு விட்டுள்ளனர் என கூறப்படுகிறது.

நடிகர் விஜயகாந்த், தே.மு.தி.கவை மதுரையில்தான் தொடங்கினார். சினிமா படப்பிடிப்பு மற்றும் அரசியல்



நிகழ்ச்சிகளுக்கு தென் மாவட்டங்களுக்கு வந்து செல்லும்போதும், தனது தாய், தந்தை நினைவு நாட்களின்போதும் மதுரையில் உள்ள அவரது வீட்டுக்கு வந்து குடும்பத்தினரை சந்தித்து சென்றார்.

சென்னையில் விஜயகாந்த்துக்கு மணி மண்டபம் அமைக்க வேண்டும் என அக்கட்சி பொதுச்செயலாளரும், அவரது மனைவியுமான பிரேமலதா தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். அதேநேரம், விஜயகாந்த்தின் சொந்த ஊரான மதுரையிலும் அவரது நினைவைப் போற்றும் வகையில் சிலை அல்லது மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்பது அவரது ரசிகர்கள், கட்சியினரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இந்த நிலையில் விருதுநகர் காங் கிரஸ் எம்.பி., மாணிக்கம் தாகூர், விஜயகாந்த் பிறந்த ஊரான மதுரையில் அவருக்கு சிலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அதற்கு மதுரை மாநகராட்சி இடம் கொடுத்து, சிலை வைப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் என அவர் மேயர் இந்திராணிக்கு கடிதம் எழுதி உள்ளார்.

தே.மு.தி.கவினர் கூட இன்னும் நேரடியாக இதுதொடர்பாக மாநகராட் சியிடம் கோரிக்கை வைக்காதநிலையில், விஜயகாந்த் இறந்த தினத்தன்றே, மாற்றுக் கட்சியைச் சேர்ந்த எம். பியான மாணிக்கம் தாகூர், மதுரையில் விஜயகாந்த்துக்கு சிலை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தது அரசியல் வட்டாரத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஆளுநர் பதவியிலிருந்து விலகவில்லை: தமிழிசை

ஆளுநர் பதவியை இராஜினாமா செய்ய உள்ளேன் என்பது தவறான செய்தி என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தனது ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட உள்ளார் என சமூக வலைதளங்களில் செய்திகள் பரவின.

இதுகுறித்து ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கூறுகையில்,

"நான் ஆளுநர் பதவியை இராஜி னாமா செய்ய உள்ளேன் என்பது தவறான செய்தியாகும். மேலிட உத்தரவு என்னவோ அதனை நான் செய்து வருகிறேன். நான் எப்பொழுதும் மக்களுடனே இருப்பேன்." என்றார்.

# அரபிக்கடலில் வணிக கப்பல்கள் மீது ட்ரோன் தாக்குதல்கள் அதிகரிப்பு



வணிக கப்பல்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதல் காரணமாக இந்திய கடற்படை 3 போர்க்கப்பல்களை அரபிக்கடலில் நிறுத்தியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், ஏதேனும் விபத்து ஏற்பட்டால் வணிகக் கப்பல்களுக்கு உதவுவதற்கும் போர்க்கப்பல்களை உள்ளடக்கிய கடற்படை பணிக்குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை தகவல் தெரிவித்துள்ளது.

இந்திய பெருங்கடல் பகுதியில், இஸ்ரேல் நிறுவனத்துக்கு சொந்தமான சரக்கு கப்பல் மீது, பயங்கரவாதிகள், "ட்ரோன்" வாயிலாக தாக்குதல் நடத்தினர்.

இந்த நிலையில், மத்திய ஆபிரிக்க நாடான, காபோனுக்கு சொந்தமான, இந்திய தேசியக் கொடியுடன் கூடிய, "எம்.வி.சாய் பாபா" என பெயரிடப்பட்ட கச்சா எண்ணெய் வணிக கப்பல் மீதும் ட்ரோன் எனப்படும் ஆளில்லா சிறிய ரக விமானம் வாயிலாக தாக்குதல் நடத்தப்பட்டது.

வணிக கப்பல்கள் மீது நடக்கும் தாக்குதலின் எதிரொலியாக இந்திய கடற்படை 3 போர்க் கப்பல்களை அரபிக்கடலில் நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில், இந்திய கடல் படை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது, கடந்த சில வாரங்களாக, செங்கடல், ஏடன் வளைகுடா மற்றும் அரபிக்கடலில் வணிகக் கப்பல்கள் மீது ட்ரோன் தாக்குதல்கள் அதிகரித்துள்ளது.

கடல்சார் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், ஏதேனும் விபத்து ஏற்பட்டால் வணிகக் கப்பல்களுக்கு உதவி செய்வதற்கு, போர்க்கப்பல்களை உள்ளடக்கிய கடற்படை பணிக்குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மத்திய அரபிக்கடல் உள்ளிட்ட பகுதிகளில் கண்காணிப்பு முடக்கிவிடப்பட்டுள்ளது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ரஷ்யாவின் பெல்கொரோட் நகரம் மீது உக்ரைன் தாக்குதல்: 21 பேர் உயிரிழப்பு

ரஷ்யாவின் பெல்கொரோட் நகரின் மீது உக்ரைன் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று சிறுவர்கள் உட்பட 21 பேர் கொலலப்பட்டுள்ளனர். 111 பேர் காயமடைந்துள்ளனர் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் நகரங்களை இலக்கு வைத்து ரஷ்யா பாரிய வான்தாக்குதல்களை மேற்கொண்டதை தொடர்ந்து உக்ரைன் இந்த தாக்குதல் களை மேற்டீ கொண்டுள்ளது.

பெல்கொரொட் நகரின் மீது பாரிய தாக்குதல் இடம்பெற்றுள்ளது என டாஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த குற்றச்செயலிற்காக தண்டனை வழங்காமலிருக்கப் போவதில்லை என ரஸ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைன் அரசாங்கம் முன்னரங்குகளில் ஏற்பட்ட தோல்விகள் குறித்து கவனத்தை திசைதிருப்ப முயல்கின்றது.




எங்களையும் இதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க தூண்டுகின்றது என ரஸ்யா தெரிவித்துள்ளது.

ரஸ்யாவுடனான எல்லையில் உள்ள நகரங்களை இலக்குவைத்து உக்ரைன் கடந்த ஒரு வருட காலத்திற்கு மேல் தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றது. எனினும் இந்த தாக்குதலிலேயே பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

# தென்னாபிரிக்காவில் கடும் வெள்ளம்: தொடரும் உயிரிழப்புக்கள்!

தென்னாபிரிக்காவில் தொடர்ந்து வரும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

க்வாஸுலு – நடால் மாகாணத்தில் பெய்த கனமழை காரணமாக லேடிஸ்மித் கிராமமே வெள்ளத்தில் மூழ்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நத்தார் தினம் முதல் ஏற்பட்டு வரும் வெள்ளப்பெருக்கில் 1400 வீடுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன், இது வரை 21 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என மீட்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# 13 ஆயிரத்து 897 ஏக்கர் பெரும்போகம் கிளிநொச்சியில் மழையால் அழிந்தது!

(எஸ். பாஸ்கரன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக சுமார் 13 ஆயிரத்து 897 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை அழிவடைந்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலை மற்றும் மழை வெள்ளம் காரணமாகவும் இரணை மடுக் குளத்தினது மேலதிக நீர் வெளியேற்றம் காரணமாகவும் இந்த முறை மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் போக நெற்செய்தியில் பெருமளவான பகுதிகள் அழிவடைந்துள்ளன.

குறிப்பாகக் கண்டாவளைப் பிரதேசத்தில் 3 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன என்று விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நெற்செய்கை அழிவு விவரங்கள் தொடர்பாக தகவல் வெளியிட்ட பிரதி ஆணையாளர்,

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாகத் தகவல்கள் திரட்டப்பட்டன. அந்தத் தகவல்களுக்கு அமைய 13 ஆயிரத்து 897 ஏக்கர் அழிவடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

4 ஆயிரத்து 461 விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது கிளிநொச்சி, இராமநாதபுரம், அக்கராயன்குளம், முழங்காவில், கண்டாவளை, பரந்தன், பூநகரி, புளியம்பொக்கணை, உருத்திரபுரம், பளை ஆகிய பத்து கமநல சேவை நிலையங்களின் கீழ் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. அழிவுகள் தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹட்டன் பஸ் நிலையத்தில் மலசலகூடத்தை பாவிக்க முடியாத நிலையில் மக்கள் விசனம்!

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் நகரில் , உள்ள பஸ் தரிப்பிடத்தில் காணப்படும் மலசல கூடங்கள் பொதுமக்கள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன என்று மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் மாநகர சபைக்கு உரித்தான பஸ் தரிப்பிடத்தில் பொது மலசல கூடம் மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் உள்ளது.

இந்த மலசல கூடம் ஹட்டன் நகர சபையால் குத்தகைக்கு விட பட்ட மலசல கூடம்.

ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் அமைந்துள்ள அந்த மலசல கூடத்தை உபயோகிக்கும் மக்களிடம் இருந்து 30 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது.

பொது மக்கள் பாவிக்க முடியாத அளவுக்கு இந்த மலசல கூடம் கடந்த சில ஆண்டுகளாக இருக்கிறது.

கழிவு நீர் நடைபாதையில் வழியாக செல்வதாலும் சுற்று சூழலில் துர்நாற்றம் வீசுகின்றது. பஸ் தரிபிடம் முழுவதும் இந்த துர்நாற்றம் பரவலாக வீசுகிறது.

இதனால் நோய்கள் உருவாகும் சூழல் அதிகமாகவே காணப்படுகிறது.

இந்த மலசலகூடத்துக்கு வருடாந்த குத்தகையாக 13 லட்சம் ரூபா ஹட்டன் மாநகர சபையால் அறவிடபடுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாரிய அளவில் நிதி பெற்ற போதும் முறையாக மலசல கூடம் இல்லை. இதற்கு யார் பொறுப்புச் செல்வது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு ஹட்டன் நகர சபை செயலாளர் மற்றும் சுற்றுசூழல் அதிகாரி பொறுப்புக் கூறவேண்டும்.

பொது சுகாதார அதிகாரிகள் இந்த இரு மலசல கூடங்களை பார்த்து இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் பாவிக்க முடியா நிலையில் காணப்படும். இந்த மலசல கூடங்களை பயன்படுத்துவோருக்கு புதிய வகை வைரஸ்கள், நோய்கள் உருவாக வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்று பொதுமக்கள் சுற்றிக் காட்டுகின்றனர்.

ஹட்டன் நகருக்கு வரும் பொது மக்கள் நலன் கருதி இந்த மலசல கூடங்கள் மீது உடனடியாக கவனம் செலுத்துமாறு பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.